தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பில் பொறிகளின் பயன்பாடு

First Published : 30 Jun 2011 12:05:14 AM IST



பெரம்பலூர்: இயற்கையாக பூச்சிகள் வெளியிடக்கூடிய ஒருவகை மணமுள்ள வேதிப் பொருளால் அல்லது ஒரு குறிப்பிட்ட வண்ணத்தால், வெளிச்சத்தால் பூச்சிகள் கவரப்படுவது பொறிகள் எனப்படும். இவற்றை செயற்கை முறையில் அமைத்துப் பயன்படுத்துவதன் மூலம் பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைக் கவர்ந்து இழுத்து, அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். பொறிகளின் வகைகள் குறித்து பெரம்பலூர் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர் கூறியது:

இனக் கவர்ச்சிப் பொறிகள்: பெண் பூச்சிகள், ஆண் இனத்தைக் கவர்ந்து, இனப் பெருக்கம் செய்து கொள்ள இயற்கையாகவே ஒரு வகையான மணம் உள்ள வேதிப் பொருளை வெளியிடுகிறது. இந்த மணத்தை செயற்கையான முறையில் ஆய்வகங்களில் தயாரித்து, பூச்சிகளுக்குத் தகுந்தாற்போல பொறிகளை வடிவமைக்கலாம். இதை வயல்வெளிகளில் வைத்து அந்துப் பூச்சிகளின் ஆண் இனத்தைக் கவர்ந்திழுத்து அழிக்கலாம்.

இவை ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. பொறிகள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. 1. செயற்கை மணம் உள்ள லூர். 2 பூச்சிகளைக் கவர்ந்திழுக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட பொறிகள்.

லூரிலிருந்து வெளிவரும் மணத்தால், பெண் பூச்சிகள் இனச் சேர்க்கைக்கு அழைக்கின்றன என எண்ணி ஆண் பூச்சிகள் பொறிகளுக்குள் கவரப்படுகின்றன. அவ்வாறு கவரப்படும் பூச்சிகளை அவ்வப்போது சேகரித்து அழித்துவடலாம். இதனால், பயிர்ச் சேதத்தைத் தவிர்க்க முடியும்.

ஓட்டுப் பொறி (டெல்டா பொறி): இதை இளஞ்சிவப்புக் காய்ப் புழுக்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தலாம். பிரமிட் போன்ற முக்கோண அமைப்புள்ள மஞ்சள் வண்ணம் பூசப்பட்ட கார்ட்போர்டினால் ஆன டெல்டா பொறிகளை அமைப்பதன் மூலம், இளஞ்சிவப்புக் காய்ப் புழுக்களின் ஆண் அந்துப் பூச்சிகளைக் கவர்ந்திழுத்து அழிக்கலாம்.

நீர்ப் பொறி: இதை கத்தரிக்காய் மற்றும் தண்டு துளைப்பான்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தலாம். இப்பொறி பெரிதான புனலையும், அடிப் பகுதியைக் குச்சியில் பிணைக்கும் வகையில் ஓர் அமைப்புடனும் அமைக்க வேண்டும். புனலின் மேல் பகுதியில் லூரை பொருத்துவதற்காக மிகச் சிறிய குடை போன்ற அமைப்பை உருவாக்கி வயலில் வைக்கும் போது, புனலில் முக்கால் பகுதிக்கு சோப்பு கலந்த நீரை நிரப்ப வேண்டும். இதனால், கவரப்பட்ட ஆண் பூச்சிகள் நீரில் விழுந்து இறந்துவிடும்.

பழ ஈ பொறி: பழ ஈக்களைக் கவர்வதற்கும் இனக் கவர்ச்சிப் பொறிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பொறிகளில் பெண் பழ ஈக்கள், ஆண் ஈக்களைக் கவர வெளியிடும் வேதிப் பொருளை ஒத்த தன்மையுடைய மிதைல் யூஜனால் எனும் வேதிப் பொருளைப் பயன்படுத்தலாம். மேலும், பலவிதமான அமைப்புகள் மற்றும் பல விதமான வண்ணங்களில் (மஞ்சள், பச்சை, ஆரஞ்சு, கருப்பு) பொறிகள் தயாரித்து ஆண் ஈக்களைக் கவர்ந்து அழிக்கலாம்.

கவர்ச்சிப் பொறிகள்: கவர்ச்சிப் பொறி என்பது ஒரு பூச்சி, தன் ஆண் மற்றும் பெண் இனத்தை, உணவுக்காகவோ அல்லது இனப் பெருக்கத்திற்காகவோ கவர்ந்திழுக்க இயற்கையாகவே மணம் உள்ள வேதிப் பொருளை வெளியிடுவதாகும். பூச்சிகளின் இந்தத் தன்மையைப் பயன்படுத்தி, செயற்கை முறையில் ஆய்வகங்களில் மணம் வீசும் இந்த வேதிப் பொருள்களைக் கொண்ட லூர் தயாரிக்கப்பட்டு, அவற்றை பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பொறிகளில் வைத்து, பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

விளக்குப் பொறிகள்: ஒரு சில பூச்சிகள், இயற்கையாக விளக்கு வெளிச்சத்தால் கவர்ந்திழுக்கப்படுகின்றன. இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வயல்களில் விளக்குப் பொறிகளை அமைத்து பூச்சிகளைக் கவர்ந்து அழிப்பது ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

விளக்குப் பொறிகள் ஏராளமான பூச்சிகளைக் கவர்ந்திழுக்கக்கூடியது. இவற்றை பொதுவாக இரவு 7 மணி முதல் 10 மணி வரை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

வாழைத் தண்டு, கிழங்கு மற்றும் தென்னை மட்டைப் பொறிகள்: வாழை அறுவடைக்குப் பிறகு உள்ள தண்டுகளை ஒன்றரை அடி அளவில் துண்டுகளாக்கி, ஒவ்வொரு துண்டையும், நீளவாக்கில் இரண்டாகப் பிளந்து, வெட்டிய பக்கம் மண்ணில் படுமாறு ஏக்கருக்கு 40 துண்டுகள் வீதம் வைத்து கிழங்குக்கூன் வண்டு மற்றும் தண்டுக் கூன் வண்டுகளைக் கவர்ந்திழுது அழிக்கலாம். இந்த முறையில் தண்டின் வெட்டிய பகுதியின் மேல் பிவோரியா பெஸியானா என்ற நன்மை பயக்கும் பூஞ்சாணத்தை (நெல்பதர் அல்லது வாழைக் கழிவில் அல்லது டால்க் தூளில் பெருக்கம் செய்யப்பட்டது) தடவி வைத்தால், கவரப்பட்ட வண்டுகள், இந்தப் பூஞ்சாணத்தால் தாக்கப்பட்டு நோய்வாய்ப்பட்டு அழிந்துவிடும்.

வட்ட வடிவத் தண்டுப் பொறி:வாழைத் தாரை வெட்டிய பிறகு, தரைமட்டத்தில் இருந்து சுமார் ஒன்றரை அடி உயரத்தில் மரத்தை வெட்டி விடவும். பிறகு வெட்டப்பட்ட மரப் பகுதியிலிருந்து

அரை அடி உயரமுள்ள வட்ட வடிவ தட்டுபோல தண்டினை வெட்டி, அதை அடித் தண்டின் மேல் பகுதியில் மூன்று அல்லது 4 சிறு கல்களை வைத்து, அதன் மேல் வைத்துவிட வேண்டும். வெட்டப்பட்ட பகுதியிலிருந்து வெளிப்படும் மணம், கிழங்கு மற்றும் தண்டுக்கூன் வண்டுகள் இரண்டையும் கவரும் தண்டுகளுக்கு இடையே உள்ள இடைவெளியில் காணப்படும் வண்டுகளை அவ்வபோது அகற்றி அழித்துவிட வேண்டும்.

கிழங்குப் பொறி: வாழைத் தாரை வெட்டிய பிறகு, மரத்தின் கிழங்குப் பகுதியை முழுவதுமாகத் தோண்டியெடுத்து, அதை நான்கு அல்லது ஐந்து பாகங்களாக வெட்டி, வெட்டப்பட்ட பகுதி தரையில்படுமாறு மரத்தின் அருகில் வைத்து, கிழங்குக்கூன் வண்டுகளை கவர்ந்தழிக்கலாம்.

தென்னை மட்டைப் பொறி: தென்னையின் பச்சை அடிமட்டையை 50 சென்டி மீட்டர் அளவுள்ள துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும். புதிதாக இறக்கப்பட்ட கள்ளுடன் ஈஸ்ட் அல்லது அசிட்டிக் அமிலம் கலந்து நொதிக்க வைத்து, அதைத் தென்னை மட்டைத் துண்டுகள் மேல் தடவி, பிளவுபட்ட பகுதிகள் ஒன்றை ஒன்று நோக்குமாறு தோப்பில் ஆங்காங்கே வைத்து வண்டுகளைக் கவர்ந்திழுக்க வேண்டும்.

வண்ண ஒட்டுப் பொறிகள்: இயற்கையாக குறிப்பிட்ட சில வண்ணங்களுக்கு, அதாவது மஞ்சள், நீலம் மற்றும் கருநீலத்துக்கு, சில பூச்சிகள் கவர்ந்திழுக்கப்படுகின்றன. பூச்சிகளின் இந்தத் தன்மையைப் பயன்படுத்தி, வண்ணப் பொறிகளைக் கொண்டு பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

நீல வண்ண ஒட்டுப் பொறிகள்: மேல்குறிப்பிட்டது போல், மஞ்சள் வண்ணத்துக்குப் பதில் நீல வண்ணத்தைப் பூசி வெங்காயம் மற்றும் காய்கறி பயிர்களைத் தாக்கக்கூடிய இலைப் பேன்களைக் கவர்ந்திழுத்து கட்டுப்படுத்தலாம்.

கரு நீல துணி விரித்தல்: பருத்திப் பயிரில் புரோடீனியா புழுக்களைக் கவர்ந்திழுத்து கட்டுப்படுத்த, வயலின் சில இடங்களில் ஊதா நிற துணியைப் பரப்பிவைத்து அதிகாலையில் துணிகளின் அடியில் தங்கும் புழுக்களைச் சேகரித்து அழிக்கலாம்.

பானைப் பொறி: கொட்டைப் புண்ணாக்கு (ஆமணக்கு) ஒரு கிலோவுடன் 5 கிராம் ஈஸ்டை 5 லிட்டர் நீரில் கலந்து, 24 மணி நேரம் ஊறவைத்த பிறகு, சிறிய மண் பானைகளில் தென்னந்தோப்பில் பல்வேறு இடங்களில் தரைமட்டத்தில் வைத்து தென்னையைத் தாக்கும் காண்டாமிருக வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம். மேலும், நீராகாரம் அல்லது ஆறிய அரிசிக் கஞ்சியுடன் 250 கிராம் ஆமணக்கு புண்ணாக்கை கலந்து, மண்பானைகளில் வைத்தும் காண்டாமிருக வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

கருவாட்டுப் பொறி: சோளம், கம்பு போன்ற பயிர்களைத் தாக்கும் குருத்து ஈக்களையும், பூசணி வகைப் பயிர்களைத் தாக்கும் பழ ஈக்களையும் கவர்ந்தழிக்க கருவாட்டுப் பொறிகளைப் பயன்படுத்தலாம். இதற்கு 5 கிராம் ஈரப்பதமுள்ள 20 கருவாட்டை 15 சென்டி மீட்டர் என்ற அளவுள்ள பாலித்தீன் பைகளில் வைத்து, ஏக்கருக்கு 20 இடங்களில் வைக்க வேண்டும்.

பாலித்தீன் பைகளில் 3 மில்லி மீட்டர் விட்டத்தில் 6 துளைகள் இடுவது அவசியம். கருவாட்டை 20 நாள்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும்.

தஞ்சாவூர் எலிக்கட்டிகள்: வயல்களில் எலிகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 40 தஞ்சாவூர் எலிக்கட்டிகளை வைத்து கவர்ந்திழுத்து அழிக்கலாம்

என்றார் அவர்.

**புனல் வடிவப் பொறிகள்**

இதை குருத்துப் பூச்சி, அமெரிக்கன் காய்ப் புழுக்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தலாம். இந்தப் பொறியில் பிளாஸ்டிக் புனல் ஒன்றும், அதைச் சற்று இடைவெளியுடன் மூடும் வகையில் ஒரு வட்ட வடிவத் தட்டு அமைக்க வேண்டும். வயலில் கட்டும் வகையில் புனலின் பக்கவாட்டில் பிடி போன்ற அமைப்பும், கவர்ந்திழுக்கப்பட்ட பூச்சிகளைச் சேகரிக்க நீண்ட பாலித்தீன் பையும் அமைக்க வேண்டும். வட்ட வடிவத் தட்டின் கீழ்ப் பகுதியின் நடுவில் லூரைப் பொருத்துவதன் மூலம் பூச்சிகளைக் கவர்ந்துழுத்து அழிக்கலாம்.

**பிளாஸ்டிக் கேன் பொறி**

வாழைக் கிழங்கு கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த இதைப் பயன்படுத்தலாம். சுமார் 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பிளாஸ்டிக் கேனின் இரு பக்கங்களில், அதன் கீழ்ப் பகுதியை மட்டும் தவிர்த்து, மற்ற மூன்று பகுதிகளையும் செவ்வக வடிவில் வெட்ட வேண்டும்.

அவ்வாறு வெட்டப்பட்ட பகுதிகள் முழுவதும் கயிறு கொண்டு நெருக்கமாக சுற்றப்பட வேண்டும். கேனின் மூடி வழியாக, லூரை நூல் மூலம் உள்புறமாகத் தொங்கவிட வேண்டும். கேன் உள் பகுதியில் சிறிது சோப்பு கலந்த தண்ணீரை நிரப்ப வேண்டும். கேனை சற்றே மண்ணில் புதைத்த மாதிரி வைத்து விட்டு, கயிறு சுற்றப்பட்டு வெட்டப்பட்ட பக்கப் பகுதிகளைக் கீழ் நோக்கி மடக்கி, அவை மேலெழும்பாத வகையில், மண்ணைக் கொண்டு ஓரத்தில் மூடிவிட வேண்டும். ஏக்கருக்கு 2 பொறிகள் வீதம் வைக்க வேண்டும். லூர்கள் ஒரு மாதம் வரை பயனளிக்கும். கவரப்பட்ட வண்டுகளை வாரம் ஒரு முறை சேகரித்து அழித்துத் தண்ணீரை மாற்றிவிட வேண்டும்.

**வாளிப் பொறி**

தென்னை சிவப்புக்கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த இதைப் பயன்படுத்தலாம். இந்தப் பொறிகள் வாளி போன்ற அமைப்பு கொண்டவை. வாளியின் மேல் மூடியில் லூரை பொருத்த ஒரு வசதி இருப்பதால், வாளியின் மேல் பகுதியில் கவரப்படும் வண்டுகள், ஊர்ந்து உள்ளே செல்கின்றன. வாளியின் உள்ளே வண்டுகள் செல்ல வசதியாக இரண்டு, மூன்று சிறு ஜன்னல்கள் அமைத்து, வாளியின் உள்ளே கால் பகுதி தண்ணீர் நிரப்ப வேண்டும். மேலும், தென்னை மட்டையின் அடிப் பகுதியை சிறு துண்டுகளாக்கி வைத்து பூச்சிகளைக் கவர்ந்திழுத்து அழிக்கலாம், இந்தப் பொறியை வாரம் ஒரு முறை மாற்ற வேண்டும்.

**மஞ்சள் வண்ண ஒட்டுப் பொறி**

தாரணமாக தகர டப்பாக்கள் அல்லது சதுர அல்லது செவ்வக வடிவமான தகரத்தை எடுத்துக்கொண்டு, அதன் மேல் மஞ்சள் வண்ண பெயிண்டைப் பூசி, சிறிது கிரிஸ் அல்லது ஏதாவது ஒரு ஒட்டும் பசையைத் தடவி, ஏக்கருக்கு 10 இடங்களில் ஒரு குச்சியில் பயிரின் உயரத்துக்கு மேல் மாட்டி விடவும். மஞ்சள் வண்ணத்துக்கு கவரப்பட்டு ஒட்டிக் கொள்ளும் பூச்சிகளை அவ்வப்போது சேகரித்து அப்புறப்படுத்த வேண்டும். மீண்டும் ஒட்டும் பசையைத் தடவ வேண்டும். இந்த வண்ண ஒட்டுப் பொறிகள் கவரும் பூச்சிகள் பெரும்பாலும் பருத்தி, காய்கறிப் பயிர்களைத் தாக்கி சேதம் விளைவிக்கக் கூடிய சாறு உறிஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈக்கள், அசுவிணி உள்ளிட்டவையாகும்.

**மஞ்சளுக்கான விலை நிர்ணய உரிமையை விவசாயிகளுக்கு வழங்க கோரிக்கை**

First Published : 30 Jun 2011 09:22:23 AM IST

ஈரோடு, ஜூன் 29: மஞ்சளுக்கான விலையை நிர்ணயம் செய்யும் உரிமையை விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என மஞ்சள் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மஞ்சள் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் ஈரோட்டில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்ட ஒருங்கிணைப்பாளர் பி.கே.தெய்வசிகாமணி செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

÷தேசிய அளவில் ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் டன் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. சர்வதேச அளவில் 78 சதம் மஞ்சள் இந்தியாவில்தான் உற்பத்தியாகிறது. ஒரு குவிண்டால் மஞ்சள் உற்பத்தி செய்ய ரூ.8500 வரை செலவாகிறது. கிடைப்பதோ ரூ.7500 தான். ஓர் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை இழப்பு ஏற்படுகிறது. நாடு முழுவதும் உள்ள மஞ்சள் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

÷மகாராஷ்டிர மாநிலம் சாங்கிலி, ஆந்திராவில் நிஜமதாபாத், தமிழகத்தில் ஈரோடு ஆகிய 3 இடங்களில்தான் மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த விலை விவசாயிகளுக்கு கட்டுபடியாவதில்லை. நாடு முழுவதும் உள்ள மஞ்சள் விவசாயிகளை ஒருங்கிணைத்து மஞ்சள் விவசாயிகள் கவுன்சில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு ஈரோட்டில் முதற்கட்டமாக தேசிய அளவில் மஞ்சள் விவசாயிகள் பங்கேற்ற கூட்டம் நடத்தப்பட்டது.

அப்துல் கலாம்: மஞ்சள் விவசாயிகள் கவுன்சிலின் முதல் மாநாடு விரைவில் ஈரோட்டில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் பேசுகிறார்.

மஞ்சள் சந்தைகளில் இடைத்தரகர்கள் அல்லது வியாபாரிகள் ஏலம் மூலம் மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்யும் முறையை ஒழிக்க மஞ்சள் விவசாயிகள் குழு துவக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் விவசாயிகள் தங்கள் அனைத்து வகை விளை பொருட்களுக்கும் தாங்களே விலையை நிர்ணயிக்கும் நிலை உருவாக வேண்டும். அதற்கான முதல் முயற்சியாகவே மஞ்சள் விவசாயிகள் குழு துவங்கப்பட்டுள்ளது என்றார்.

**வெங்காய ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க வேண்டும்: உழவர் உழைப்பாளர் கட்சி வலியுறுத்தல்**

First Published : 30 Jun 2011 09:23:35 AM IST

பல்லடம், ஜூன் 29: வெங்காயம் ஏற்றுமதி செய்ய தொடர்ந்து அனுமதி வழங்க வேண்டும் என்று உழவர் உழைப்பாளர் கட்சி வலியுறுத்தியுள்ளது.

உழவர் உழைப்பாளர் கட்சியின் பொங்கலூர் வட்டார நிர்வாகிகள் கூட்டம் வாவிபாளையத்தில் நடைபெற்றது. வட்டாரத் தலைவர் ஈஸ்வரமூர்த்தி தலைமை வகித்தார். பொருளாளர் வெங்கடாசலம் முன்னிலை வகித்தார். செயலாளர் நடராஜ் வரவேற்றார்.

ஜூலை 5ம் தேதி தஞ்சையில் நடக்கும் தியாகிகள் மாநாட்டில் இவ்வட்டாரத்திலிருந்து 2 ஆயிரம் பேர் பங்கேற்பது. வெங்காயம் ஏற்றுமதிக்கு அரசு தொடர்ந்து அனுமதி அளிக்க வேண்டும். மஞ்சள், மக்காசோளத்துக்கு ஆதார விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

தேங்காயை விவசாயிகளிடம் இருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்ய வேண்டும். சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் தொழில்களை கிராமப் பகுதிகளில் அமைக்க அரசு அனுமதி அளிக்கக் கூடாது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இளைஞரணி தலைவர் சோமு நன்றி கூறினார்.

**தலையங்கம்: பொருளாதாரப் பேதைகள்**

First Published : 30 Jun 2011 01:56:55 AM IST

Last Updated : 30 Jun 2011 04:33:13 AM IST

விண்ணை முட்டும் விலைவாசி காரணமாக நாட்டு மக்கள் தாங்கொணாத தவிப்புக்கு ஆளாகிவருகிறார்கள். ஆட்சியாளர்களோ சதவீதக் கணக்கைப் போட்டுக்கொண்டு ""ரிசர்வ் வங்கி நடவடிக்கையால் பணவீக்கம் கட்டுக்குள் வந்துவிட்டது, வந்து கொண்டிருக்கிறது, வருவது உறுதி" என்று கட்டியங்கூறிக் கொண்டே காலத்தைக் கடத்துகிறார்கள்.

விலைவாசி உயர்வுக்கு காரணம் கேட்டால் ""இது சர்வதேசச் சந்தையின் பாதிப்பு, எங்களுடைய சாமர்த்தியத்தால்தான் இது தீவிரமாக உங்களைத் தாக்கவில்லை" என்று கூறுகிறார்கள்.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு நடைபாவாடை விரிக்க எங்கே சந்தர்ப்பம் என்று அலைபாயும் நம்முடைய ஆட்சியாளர்கள், ""சில்லறை வர்த்தகத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் நேரடி முதலீட்டுக்கு அனுமதி அளித்துவிட்டால் இந்த விலைவாசி குறைந்துவிடும்" என்று புதிதாக ஓத ஆரம்பித்திருக்கிறார்கள்.

""விலைவாசி ஒன்றும் அப்படி ஒரேயடியாக உயர்ந்துவிடவில்லை, நம் நாட்டு மக்கள் தாங்கும் அளவுக்குத்தான் இருக்கிறது, நம் நாட்டின் எந்தப் பகுதியிலும் பட்டினிச் சாவு நிகழவில்லை, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களுக்கு மலிவு விலையிலோ இலவசமாகவோ கோதுமையும் அரிசியும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், நம்முடைய களஞ்சியங்களில் அடுக்க

இடம் இல்லாமல் வெட்ட வெளியில் தானியங்களை மழைக்கும் வெயிலுக்கும் தீனியாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்றெல்லாம் இறுமாப்புடன் பதில் சொல்கிறார்கள்.

ஆனால் இந்தப் பணவீக்கம் என்ற பகாசுரன் பாமர மக்களின் வாழ்க்கையைச் சூறையாடி வருவதை ""கிரைசில்" என்ற தர மதிப்பீட்டு அமைப்பின் சமீபத்திய ஆய்வு அம்பலப்படுத்தியிருக்கிறது.

கடந்த 3 நிதியாண்டுகளில் மட்டும் 5.8 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு மக்களுக்குக் கூடுதல் செலவு ஏற்பட்டிருக்கிறது.

ஏழைகள், நடுத்தர மக்களை இந்த விலை உயர்வு கடுமையாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது. சாப்பாட்டுச் செலவை மட்டுமே சமாளிக்க முடியாமல் குடும்பங்கள் அரை வயிறு, கால் வயிறு என்று சாப்பிடத் தொடங்கிவிட்டன. ஏழை, நடுத்தர மக்களுடைய வாங்கும் சக்தி வெகுவாகக் குறைந்துவிட்டது.

சாப்பாட்டுச்செலவு அதிகமாகிவிட்டதால் மருத்துவச் செலவு, கல்விச் செலவு போன்றவற்றைக் குறைத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டனர். நோய் முற்றி பாயில் விழுந்தால்தான் இனி சிகிச்சை என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

2008-09-ம் நிதியாண்டு முதல் 2010-11-ம் நிதியாண்டு வரை பணவீக்க விகிதம் 8% ஆக அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டில் இது வெறும் 5% ஆகத்தான் இருந்தது.

அரிசி, கோதுமை, பருப்பு, இதர தானியங்கள், சமையல் எண்ணெய், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் விலை உயர்வு மட்டும் 11.6% ஆக இந்தக் காலத்தில் இருந்திருக்கிறது. உணவுப் பொருள் அல்லாத பண்டங்களின் விலை உயர்வோ 5.7% ஆகத்தான் இருந்திருக்கிறது. இதில் இரட்டை ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதாவது சாமான்யர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்குத் தேவை குறைந்து அவற்றை வாங்குவோர் குறைந்ததால் அவற்றின் விலையை உயர்த்த முடியாமல் குறைத்துவிட்டனர். இதனால் அந்தத் துறையில் வேலை இழப்பும் ஆள் குறைப்பும் ஏற்பட்டிருக்கிறது.

விலைவாசியைக் குறைக்க அரசு எடுத்த ஒரே நடவடிக்கை ரிசர்வ் வங்கி மூலம் வட்டி வீதத்தை கால், கால் (0.25) சதவீதமாக பத்து முறை உயர்த்தியதுதான். வீடு கட்டக் கடன் வாங்கியவர்களும் வாகனக்கடன் வாங்கியவர்களும் மேலும் தங்களுடைய பொருளாதாரச் சக்தியை இழந்ததுதான் மிச்சம்.

அதனால், வங்கிகளின் புத்தக மதிப்பு லாபம் பல மடங்கு கூடியது; எனவே ஆட்சியாளர்கள் ""தங்களுடைய திறமையால் வங்கிகள் லாபம் ஈட்டி வருவதாக" தம்பட்டம் அடித்து வருகின்றனர்.

""சர்வதேச பண்டச் சந்தையில் விலைவாசி உயர்ந்து கொண்டே வருவதால், அதிலும் குறிப்பாக கச்சா பெட்ரோலிய எண்ணெய் விலை அதிகரித்துக் கொண்டே வருவதால் நடப்பு நிதியாண்டின்

முதல் ஆறு மாதங்களில் விலைவாசி குறையாது, உயர்ந்துகொண்டே போகும்" என்று ஆரூடம் கூறுகிறது ரிசர்வ் வங்கியின் அறிக்கை.

சமீபத்திய டீசல், சமையல் கேஸ், கெரசின் விலை உயர்வால் பணவீக்க விகிதம் இரட்டை இலக்கை ஜூலையிலேயே தாண்டும் என்று எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது.

3 ஆண்டுகளுக்கு முன்னால் ஒருவர் தன் வருவாயில் வெறும் 14 சதவீதத்தைத்தான் தன்னுடைய செலவுகளுக்காக ஒதுக்கினார். இப்போது அந்தத் தேவைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டாலும்கூட 17% அளவுக்கு அவருக்குப் பணம் தேவைப்படுகிறது. இந்த நிலைமை இப்படியே போனால் நடுத்தர மக்களிடம் சேமிப்பே இருக்காது என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

சர்வதேச அளவில் மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும்கூட இந்தியாவில் பொருளாதாரச் சக்கரம் சுழல்வதற்கு நடுத்தர மக்களின் சேமிப்புதான் அச்சாணியாக இருந்தது. இப்போது அந்த அச்சாணியும் முறியத் தொடங்கியிருக்கிறது.

தாங்க முடியாத விலைவாசி உயர்வுதான் தீவிரவாதத்துக்கு அடிப்படைக் காரணமாக அமையும். சராசரி மனிதனின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத அளவுக்கு விலைவாசி உயரும்போது அது சட்ட ஒழுங்கு பிரச்னையாக மாறிவிடுகிறது. இதுகூடப் புரியாமல் ஆட்சி செய்த பிரெஞ்சு மன்னன் 16}ம் லூயியின் சரித்திரத்தை இன்றைய மத்திய ஆட்சியாளர்கள் படித்துத் தெரிந்து கொள்வது நல்லது.

மக்களவை பொதுத் தேர்தலுக்குத்தான் இன்னும் 3 ஆண்டுகள் இருக்கிறதே என்று மெத்தனமாக இராமல் விலைவாசியைக் கட்டுக்குள் வைக்க முழு முனைப்புடன் அரசு செயல்பட வேண்டும். பொருளாதாரம் வளருவது இருக்கட்டும். முதலில் விலைவாசியைக் குறைப்பது பற்றிக் கவலைப்படுவோம். பொருளாதாரம் படித்தால் மட்டும் போதாது. மக்களின் வாழ்வாதாரம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதும் தெரிந்திருக்க வேண்டும்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் - 78.07 அடி**

First Published : 30 Jun 2011 09:23:10 AM IST

ஈரோடு, ஜூன் 29: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 78.07 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 3,489 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 1,100 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 14.69 டிஎம்சி.

**அணைகளின் நீர்மட்டம்**

First Published : 29 Jun 2011 11:19:53 AM IST

பொள்ளாச்சி, ஜூன் 28: பொள்ளாச்சி அருகிலுள்ள அணைகளின் நீர்மட்டம்:

÷சோலையாறு (160) அடி: தற்போதைய நீர்மட்டம் 113.83 அடி, நீர்வரத்து 1,601 கனஅடி, நீர் வெளியேற்றம் 808 கனஅடி, மழைஅளவு 50 மிமீ.

÷ஆழியாறு (120)அடி: தற்போதைய நீர்மட்டம் 100.83 அடி, நீர்வரத்து 92 கனஅடி, நீர் வெளியேற்றம் 165 கனஅடி, மழைஅளவு 13.8 மிமீ.

÷பரம்பிக்குளம் (72) அடி: தற்போதைய நீர்மட்டம் 61.00 அடி, நீர்வரத்து 1,305 கனஅடி, நீர் வெளியேற்றம் 53 கனஅடி, மழைஅளவு 57 மிமீ.

÷அமராவதி (90)அடி: தற்போதைய நீர்மட்டம் 50.23 அடி, நீர்வரத்து 587 கனஅடி, நீர் வெளியேற்றம் 212 கனஅடி.

÷திருமூர்த்தி (60அடி): தற்போதைய நீர்மட்டம் 35.28, நீர் வெளியேற்றம் 19 கனஅடி, மழைஅளவு 7 மிமீ.

÷மழைஅளவு: அப்பர் நீராறு 77 மிமீ, லோயர் நீராறு 32 மிமீ, தூணக்கடவு 43 மிமீ, பெருவாரிப்பள்ளம் 39 மிமீ, பொள்ளாச்சி 92 மிமீ, மணக்கடவு 59 மிமீ, நவமலை 17 மிமீ, சர்க்கார்பதி 14 மிமீ, அப்பர் ஆழியார் 8 மிமீ, காடம்பாறை 4 மிமீ.

**நீர்மட்டம்**

First Published : 29 Jun 2011 10:10:52 AM IST

பாபநாசம் 58.20 அடி 143.00 அடி

சேர்வலாறு 63.48 அடி 156.00 அடி

மணிமுத்தாறு 57.83 அடி 118.00 அடி

கடனாநதி 52.50 அடி 85.00 அடி

ராமநதி 53.00 அடி 84.00 அடி

கருப்பாநதி 51.18 அடி 72.00 அடி அடவிநயினார் 81.75 அடி 132.00 அடி

பேச்சிப்பாறை 43.85 அடி 48.00 அடி

பெருஞ்சாணி 57.75 அடி 77.00 அடி

சிற்றாறு 1 12.56 அடி 18.00 அடி

சிற்றாறு 2 12.66 அடி 18.00 அடி

முக்கடல் 0.45 அடி 25.00 அடி
பொய்கை 18.00 அடி 42.45 அடி

**நீர்மட்டம் குறையும் அணைகள்; வறட்சியின் பிடியில் குளங்கள்: விவசாயிகள் கவலை**
First Published : 29 Jun 2011 10:10:34 AM IST

அம்பாசமுத்திரம்/களக்காடு,ஜூன் 28:÷திருநெல்வேலி மாவட்டத்தில் பருவமழை தொடர்ந்து பெய்யாததால் போதிய நீர்வரத்து இன்றி, அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. மானாவாரி, பாசனக் குளங்களும் வறண்டு வருகின்றன.

÷தாமிரபரணி வடிநிலப் பாசனத்தில் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் கார் பருவ சாகுபடியும், வடகிழக்குப் பருவமழை காலத்தில் பிசானப் பருவ சாகுபடியும் செய்யப்படுகின்றன.

தாமிரபரணி பாசனத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 7 கால்வாய்கள் மூலம் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 4 கால்வாய்கள் மூலம் 46,107 ஏக்கர் நிலங்களும் பாசனம் பெற்று வருகின்றன.

2010-ம் ஆண்டில் கார் பருவத்தில் தென்மேற்குப் பருவமழை 35 சதவிகிதம் குறைவாகப் பெய்தது. இதன் காரணமாக இவ்விரு மாவட்டங்களில் முழு அளவில் பாசனம் செய்யப்படவில்லை.

÷இதற்கிடையே, 2010-ல் அக்டோபர் முதல்வாரத்தில் பருவம் தவறிப் பெய்த மழையால் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது. எனவே முன்கூட்டியே பிசானப் பருவ சாகுபடிக்கு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

÷அதன்பிறகு வடகிழக்குப் பருவமழை பெய்த போதிலும் இம்மாவட்டத்தில் உள்ள பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு அணைகள் நிரம்பவில்லை. அணைகளில் நீர் இருப்பு வெகுவாகக் குறைந்தது.

இந்நிலையில், தென்மேற்குப் பருவமழை ஜூன் முதல் தேதியில் தொடங்கி ஒருசில நாள்கள் மட்டுமே பெய்தது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது.

÷இதையடுத்து, ஜூன் 14-ம் தேதி பாபநாசம் அணையிலிருந்து கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அடுத்தடுத்து இம்மாவட்டத்தில் 7 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கும் தண்ணீர் திறக்கப்பட்டதால், விவசாயப் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

÷கால்வாய்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டதாலும், தொடர்ந்து பருவமழை பெய்யாததாலும் இப்போது அணைகளில் நீர்இருப்பு குறைந்து வருகிறது. அணைகளுக்கு நீர்வரத்தும் குறைந்து காணப்படுகிறது. இதேநிலை நீடித்தால் கார் சாகுபடிக்கு முழுமையாகத் தண்ணீர் வழங்க வாய்ப்பு இல்லை எனக் கருதப்படுகிறது.

÷செவ்வாய்க்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 58.20 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 63.48 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 57.83 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 52.50 அடியாகவும் இருந்தது.

÷பாபநாசம் அணையில் ஒரு மி.மீ. மழை பதிவாகியுள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 790 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து 1,400 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. மணிமுத்தாறு அணையில் இருந்து விநாடிக்கு 25 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

÷இப் பாசனத்தில் உள்ள பாசனக் குளங்களும், மானாவாரிக் குளங்களும் வறண்டு வருகின்றன. எனவே விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

களக்காடு பகுதியில் 100 குளங்கள் வறண்டன: களக்காடு வட்டாரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பாசனக் குளங்கள் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகின்றன.

வடக்குப் பச்சையாறு அணையில் கடந்த 4 மாதங்களுக்கும் மேலாக வெறும் 2 அடி மட்டுமே தண்ணீர் உள்ளது.

வடக்குப் பச்சையாறு அணையின் மூலம் களக்காடு, நான்குனேரி வட்டாரத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குளங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதில் பெரும்பாலான குளங்களில் கடந்த மார்ச் மாதமே தண்ணீர் வற்றிவிட்டது. இந்நிலையில், ஜூன் தொடக்கத்தில் களக்காடு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பரவலாக தொடர் சாரல் மழை பெய்தது.

இதையடுத்து, மலைப் பகுதியில் தலையணை, தேங்காய் உருளி, கருங்கல்கசம், கோழிக்கால் உள்ளிட்ட நீரோடைகளில் தண்ணீர் வரத்து காணப்பட்டது. இந்த தண்ணீர் களக்காடு ஆறுகளை வந்தடையவில்லை.

கடந்த 20 தினங்களுக்கும் மேலாக சாரல் மழையும் இன்றி மீண்டும் கடுமையான வெப்பம் நிலவுகிறது. இதனால் விவசாயிகள் வாழைப் பயிரைக் காப்பாற்ற மிகவும் சிரமப்படுகின்றனர்.

களக்காடு மலைப் பகுதியில் உள்ள தலையணையில் ஓரளவுக்கு தண்ணீர் வரத்து உள்ளது. ஆனால், இந்த தண்ணீர் மலைப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு மடைமாற்றி விடப்படுவதால் வடக்குப் பச்சையாறு அணைக்கு தண்ணீர் செல்லவில்லை.

**முட்டை விலை**

First Published : 29 Jun 2011 02:16:58 PM IST

நாமக்கல், ஜூன் 28: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.68, சென்னையில் ரூ.2.74.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.45, முட்டைக் கோழி கிலோ ரூ.40.

**உளுந்து பயிரில் வயல்வெளி ஆய்வு**

First Published : 29 Jun 2011 02:00:36 PM IST

பெரம்பலூர், ஜூன் 28: பெரம்பலூர் அருகேயுள்ள அய்யலூர், சிறுவாச்சூர், வாலிகண்டபுரம் உள்ளிட்ட கிராமங்களில் திங்கள்கிழமை வயல்வெளி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வை பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து, தொழில்நுட்ப வல்லுநர் சி.சங்கர் ஆகியோர் தலைமையிலான வேளாண்மை அலுவலர்கள் மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில், தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக சாறு உறிஞ்சும் பூச்சிகள், காய், பூ துளைப்பான்கள், சிலந்திபேன், வேர் அழுகல் மற்றும் எலிகள் சேதமும், சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்கப்பட்ட செடிகளில் இலைகள் சுருங்கி நெளிந்து, மஞ்சள் தேமல் நோயுடன் காணப்படுகிறது.

இதனால், வளர்ச்சி குன்றி காணப்பட்டு பூ மற்றும் பிஞ்சுகள் குறைந்து, இலை மற்றும் தண்டு பகுதிகளில் இருந்து சாறை உறிஞ்சுகிறது. மேலும், காய்ப்புழுக்கள், காய்களை துளைத்து அதிகளவில் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது.

சிலந்திப் பேனானது, தற்போது காற்று மற்றும் வெப்பம் அதிகமாக இருப்பதால், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு எளிதாக பரவுகிறது. இந்தப் பூச்சி, இலையின் அடி நரம்புகளின் ஓரங்களில் சல்லடை போன்ற பின்னல்களை எற்படுத்திக்கொண்டு சாறை உறிஞ்சுகிறது. இதனால் நரம்பு ஓரத்தில் படை வந்தது போல காணப்படுகிறது.

மேலும், தாவர வேர்புழுக்களின் சேதமும், வேர் அழுகல் நோயும் அதிகம் காணப்படுகிறது. இதனால், செடி வாடி இலைகள் முழுவதும் நல்ல மஞ்சள் நிறத்துடன் காணப்படும். மேலும், மானாவாரி நிலங்கள் அதிகமாக இருப்பதால் அங்குள்ள எலிகளுக்கு உணவு சரியாக கிடைக்காமல், உளுந்து பயிரிடப்பட்டுள்ள வயல்களில் சேதத்தை ஏற்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது என்றனர்.

பின்னர், திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.மாரிமுத்து கூறியது:

உளுந்தில் ஏற்படக்கூடிய பிரச்னைகளை கட்டுப்படுத்த, வயலில் களை இல்லாமல் இருப்பதோடு, மண்ணின் தரத்தை அறிந்து தழைச்சத்து இட வேண்டும். சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, வேம்பு சார்ந்த பூச்சிக் கொல்லிகளை தெளித்தல், ஒட்டும் பொறி வைத்தல், பொருளாதார சேத நிலையைப் பொறுத்து ராசாயன பூச்சிக் கொல்லிகளை தெளிக்க வேண்டும். காய்புழுக்களை கட்டுப்படுத்த விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப் பொறி வைக்க வேண்டும். எலிகளைக் கட்டுப்படுத்த வயலில் ஆந்தைப்பந்தல் அமைத்தால், இரவு நேரத்தில் ஆந்தை எலிகளைப் பிடித்து உண்ணும்.

சிலந்திப் பேனை கட்டுப்படுத்த வேம்பு சார்ந்த பூச்சிக் கொல்லி தெளிக்க வேண்டும். இந்தப் பூச்சியின் சேதம் பொருளாதார சேத நிலையை தாண்டும் போது, ரசாயன பூச்சிக்கொல்லியான ஓமைட் அதாவது புரோபர்கிட் அல்லது டைகோபால் அல்லது ஈத்தியான் போன்ற மருந்துகளில் ஏதாவது ஒன்றை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி வீதம் ஒட்டும் திரவம் ஒரு மில்லி கலந்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

தாவர நூல்புழு மற்றும் வேர் அழுகல் நோய் இருந்தால் அதிகமாக மட்கிய தொழு உரம், வேப்பம் பிண்ணாக்கு இட வேண்டும். நன்மை செய்யும் எதிர் உயிர் பூஞ்சாணம் - டி.விரிடி 2 கிராம் மற்றும் எதிர் உயிர் பாக்டீரியாவான சூடோமோனாஸ் 2 கிராம் உள்ளிட்டவற்றை தெளிக்கலாம் அல்லது குருணை மருந்தை ஏக்கருக்கு 4 கிலோ இட்டு, பவிஸ்டின் என்ற பூஞ்சாண கொல்லியை கரைத்து செடிக்கு செடி நன்கு ஊற்றவும். இவ்வாறு செய்தால் நல்ல மகசூல் பெறலாம்.

மேலும், விவரங்களுக்கு தொழில் நுட்ப வல்லுநரான சி. சங்கரை 04328-293251, 293592 உள்ளிட்ட தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர்.

இந்த ஆய்வின் போது, முன்னோடி விவசாயி சுப்பிரமணியம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**அதிகளவில் நெல் கொள்முதல் செய்யக் கோரிக்கை**

First Published : 29 Jun 2011 02:27:25 PM IST

கிருஷ்ணகிரி, ஜூன் 28: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிகளவில் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் கே.எம்.இராமகவுண்டர், தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி, கால்வேஹள்ளி, காவேரிப்பட்டணம் ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் மையங்கள் செயல்பட அனுமதிக்கப்பட்டது. ஆனால், காவேரிப்பட்டணத்தில் மட்டும் சில மாதங்களுக்கு முன்பு நெல் கொள்முதல் மையம் தொடங்கப்பட்டது.

இங்கு, தினசரி ரூ.2 லட்சம் மதிப்பிலான நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதுவரை சுமார் 15 ஆயிரம் மூட்டைகள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 24-ம் தேதி முதல் ஒரு லட்சம் மதிப்பிலான நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது.

இதனால், இருப்பில் வைத்துள்ள நெல்லை அரசு கொள்முதல் மையத்தில் விற்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். தனியாரிடம் குறைந்த விலைக்கு விற்கும் சூழல் உருவாகியுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இந்நிலைமாற அதிகளவில் நெல் கொள்முதல் செய்ய வேண்டும்.

தினமலர்

# விவசாயிகள் மகிழ்ச்சி விலை சரிவிலிருந்து மீண்டது மஞ்சள்

பதிவு செய்த நாள் : ஜூன் 30,2011,02:10 IST

ஆத்தூர் : ஆத்தூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 580 மூட்டை மஞ்சள், 23 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டியில், சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. கடந்த மார்ச் மாதம் துவங்கிய மஞ்சள் ஏலத்தில், குவிண்டால், 12 ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்றது.

அதைதொடர்ந்து, அடுத்தடுத்த வாரங்களில் நடந்த மஞ்சள் ஏலத்தில் விலை சரிவை நோக்கிச் சென்றது. அதனால், மஞ்சள் ஏலத்தில் பெரும்பாலான வியாபாரிகள் கலந்து கொள்ளவில்லை. அதனால், விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்யாமல், இருப்பு வைக்கத் துவங்கினர்.

அதன் எதிரொலியாக, கடந்த, 18ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக, 7,699 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள், 7,359 ரூபாய்க்கும் மற்றும் பனங்காலி மஞ்சள், 14 ஆயிரத்து 669 ரூபாய்க்கும் விற்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் குறைந்தபட்சமாக, 6,579 ரூபாயும், அதிகபட்சமாக, 10 ஆயிரத்து 89 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 6,199 ரூபாய்க்கும், அதிகபட்சமாக 8,869 ரூபாய்க்கும், பனங்காலி (தாய் மஞ்சள்) குவிண்டால் குறைந்தபட்சமாக, 14 ஆயிரத்து 900 ரூபாயும், அதிகபட்சமாக 22 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

கடந்த, 18ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தை காட்டிலும், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால், 2,390 ரூபாயும், உருண்டை மஞ்சள், 1,510 ரூபாயும், பனங்காலி மஞ்சள், 7,331 ரூபாயும் விலை உயர்ந்துள்ளது.

ஏலத்துக்கு மஞ்சள் மூட்டைகள் வரத்து குறைந்த நிலையில், 580 மூட்டை மஞ்சள், 23 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. மஞ்சள் விலை சரிவை நோக்கிச் சென்ற நிலையில், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் திடீரென மஞ்சள் விலை உயந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**சிறுபாக்கத்தில் சூரியகாந்தி அமோக விளைச்சல்: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,23:30 IST

சிறுபாக்கம் : கோடையில் பெய்த கனமழை காரணமாக சிறுபாக்கம் பகுதியில் மானாவாரி நிலங்களில் பயிர் செய்யப்பட்டுள்ள சூரியகாந்தி அமோகமாக விளைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வேப்பூர், மங்களூர், சிறுபாக்கம் பகுதிகளில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் மானாவாரி நிலங்களில் மக்காச்சோளம், பருத்தி, மணிலா, வரகு பயிர்களை விவசாயம் செய்வது வழக்கம். கடந்த இரண்டு ஆண்டுகளாக அறுவடைக்குப்பின், கோடை காலங்களில் பருவநிலை மாற்றம் காரணமாக சிறுபாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. நடப்பு ஆண்டில் பெய்த கோடை மழையை பயன்படுத்தி, கடந்த ஒரு மாதத்திற்கு முன் விவசாயிகள், தங்கள் மானாவாரி நிலங்களில் சூரியகாந்தி பயிர் செய்தனர். பனிப் பொழிவு மற்றும் லேசான மழையில் விளையக்கூடிய பயிரான சூரியகாந்தி, தற்போது பெய்த கோடை மழை காரணமாக ஈரப்பதத்தில் நன்கு வளர்ச்சியடைந்து, பூத்துக் குலுங்குவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**எண்ணெய் பனை சாகுபடி: விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,23:25 IST

பண்ருட்டி : எண்ணெய் பனை சாகுபடி செய்து அதிக லாபம் ஈட்டிட பண்ருட்டி வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகம் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பண்ருட்டி வட்டாரத்தில் கடந்த 4 ஆண்டுகளாக வீரபெருமாநல்லூர், மணப்பாக்கம், சிறுகிராமம், நத்தம், பூங்குணம், திருவதிகை, விசூர், நன்னிக்குப்பம், திருவாமூர், ரெட்டிப்பாளையம் ஆகிய கிராமங்களில் 375 ஏக்கர் பரப்பளவில் எண்ணெய் பனை சாகுபடி செய்து வருகின்றனர். பொதுவாக எண்ணெய் பனை 3 ஆண்டுகளில் பழங்கள் அறுவடைக்கு தயாராகி ஆலைக்கு அனுப்பப்படுகிறது. தற்போது பழக்குலை டன் ஒன்றுக்கு 6,201 ரூபாய்க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. இதுவரை பண்ருட்டி வட்டாரத்தில் 45 டன் அறுவடையாகி அரியலூர் வாரணவாசி ஆலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தண்ணீர் பாய்ச்சும் வசதியுள்ள விவசாயிகள் பாமாயில் மரக்கன்றுகளை நடுவதற்கு இதுவே தக்க தருணம். எனவே விவசாயிகள் எண்ணெய் சாகுபடி செய்ய வேளாண்மை உதவி இயக்குனர், வேளாண்மை அலுவலரை அணுகி பயன்பெறலாம். எண்ணெய் பனை நடவு செய்ய விவசாயிகளுக்கு எக்டருக்கு முதல் ஆண்டு நடவு மானியம் 4,140 ரூபாயும், இரண்டாம் ஆண்டு உர மானியமாக 2,450, மூன்றாம் ஆண்டு 2,800, நான்காம் ஆண்டு 3,250 ரூபாயும்

வழங்கப்படுகிறது. எண்ணெய் பனை நடவு செய்வதால் தண்ணீர் தேவை குறைவு, விவசாய கூலி ஆட்கள் தேவை குறைவு, 50 சதவீத மானிய விலை உரங்கள், எண்ணெய் பனை பயிரில் நல்ல வருமானம் கிடைக்கும். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**பயிர் மதிப்பீட்டு ஆய்வு: புத்தாக்க பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,23:48 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சியில் வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி முகாம் நடந்தது. விழுப்புரம் வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். புள்ளியியல் துறை உதவி இயக்குனர் ராமசாமி முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் வரவேற்றார்.இதில் பயிர் மதிப்பீட்டு ஆய்வு குறித்த புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது. கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் ஆகிய நான்கு தாலுகா பகுதிகளைச் சேர்ந்த வேளாண்துறை, தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மற்றும் சர்க்கரை ஆலை விரிவாக்க பணியாளர்கள் பங்கேற்றனர்.

**முருங்கை விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,21:03 IST

பொங்கலூர் : முருங்கை விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.பொங்கலூர் வட்டாரத்தில், மர முருங்கை மற்றும் நாற்று விட்டு நடவு செய்யப்படும் செடி முருங்கை என இரண்டு வகையான ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. நீண்ட காலத்துக்கு பயன் தரக்கூடிய மர முருங்கை இரண்டு போகம் மட்டுமே காய்க்கும் இயல்புடையது. இது, தற்போது பூக்க ஆரம்பித்துள்ளன. காய்ப்புக்கு வர இன்னும் ஒரு மாதமாகும். செடி முருங்கை குறுகிய கால பயிர். இது, மூன்று போகமும் காய்க்கும் இயல்புடையது என்பதால், செடி முருங்கை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது, செடி முருங்கை காய்கள் முன்கூட்டியே காய்ப்புக்கு வந்துள்ளதால், மார்க்கெட்டில் நல்ல விலை கிடைத்து வருகிறது. ஒரு காய் இரண்டு ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதனால், செடி முருங்கை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்து வருகிறது.

**மஞ்சளுக்கு மவுசு "போச்' கையிருப்பு கையை கடிக்கும்!**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,20:53 IST

கோவை : "மஞ்சள் விலை குறைந்து வருவதால், இருப்பு வைத்துள்ள விவசாயிகள் விற்பனை செய்துவிடலாம்' என்று, வேளாண் பல்கலை கழகம் அறிவுறுத்தி உள்ளது.கோவை, வேளாண் பல்கலை கழகம் வெளியிட்டுள்ள செய்தி:கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் குவின்டால் 15 ஆயிரம் ரூபாய் வரை விற்ற மஞ்சள், தற்போது 6,500 முதல் 7,500 ரூபாய் வரை விற்கிறது. மஞ்சள் சாகுபடி பரப்பு 25 சதவீதம் அதிகரித்தது. உற்பத்தி 43 சதவீதம் உயர்ந்து, 70 லட்சம் மூட்டை விளைச் சல் கிடைத்ததன் மூலம் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. ஈரோடு சந்தையில் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களின் மஞ்சள் வரத்து குறைந்துவிட்டது. விலை குறைவால், தமிழக மஞ்சள் வரத்தும் குறைந்திருக்கிறது. கடந்த டிசம்பர் மாத மழையால், தரம் பாதிக்கப்பட்டது. தரம் குறைந்த மஞ்சள், அதிக இருப்பு, குறைந்த ஏற்றுமதி ஆகிய காரணங்களால் விலை இறங்குமுகமாக செல்கிறது. சந்தை தகவலின்படி, அடுத்த மூன்று மாதத்துக்கு விலை ஏறுவதற்கான வாய்ப்பில்லை. சாகுபடி பரப்பு, இருப்பு நிலவரம், பண்டிகை கால தேவையை பொறுத்து, விலை சிறிது மாறுபடும். ஆடி மற்றும் தீபாவளி சமயத்தில், வட மாநிலங்களில் மஞ்சள் தேவை அதிகரிக்கும். அந்த சமயத்தில் குவிண்டாலுக்கு 500 முதல் 1,000 ரூபாய் வரை விலை உயரும் வாய்ப்பிருக்கிறது.
மஞ்சள் இருப்பு வைத்துள்ள விவசாயிகள், விற்பனை செய்வது நன்மை அளிக்கும். ஜூன் மாதத்தில் ஈரோடு பகுதியில் மஞ்சள் பயிரிடும் பரப்பை குறைத்தல் அவசியம். விபரங்களுக்கு: 0422-2431405.

**தக்காளி உணவு பொருட்கள் தொழிற்சாலை:விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,21:06 IST

உடுமலை : தக்காளி சாகுபடியில் விவசாயிகள் தொடர்ந்து நஷ்டத்திற்குள்ளாவதை தடுக்க மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு துவக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் 15 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக தக்காளி பயிரிடப்படுகிறது. ஆண்டிற்கு மூன்று சீசன்களில் தக்காளி பயிரிடப்பட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரளாவிற்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. தக்காளிக்கு நல்ல விலை கிடைக்கும் போது உடுமலை பகுதியில் சாகுபடி மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. தற்போது தக்காளி கிலோவுக்கு 15 ரூபாய் கிடைத்து வருகிறது. ஆனால், தென்மேற்கு பருவமழையால் தக்காளி செடிகளில் பூ மற்றும் பிஞ்சு உதிர்ந்து விளைச்சல் இல்லை.

இவ்வாறு, விலை இருக்கும் போது சாகுபடி இல்லாமலும், சாகுபடியின் போது விலை வீழ்ச்சி ஏற்பட்டும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இடுபொருட்கள் விலை உயர்வு, தொழிலாளர் பற்றாக்குறை போன்ற காரணங்களால் ஏக்கருக்கு சாகுபடி செலவு 15 ஆயிரம் ரூபாயை தாண்டியுள்ளது. ஒவ்வொரு சீசனிலும் தக்காளி சாகுபடி செய்து நஷ்டத்தை சந்தித்து வரும் விவசாயிகள் மாற்று சாகுபடிக்கு சென்று வருகின்றனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், தக்காளி சாகுபடியில் சீசன் துவங்கியதும் வரத்து அதிகரித்து சில சமயங்களில் செயற்கையாக விலை வீழ்ச்சி ஏற்படுத்தப்படுகிறது. தக்காளியை குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் இருப்பு வைக்க முடியாத நிலை இருப்பதால் செடிகளிலிருந்து பறித்து சந்தைக்கு கொண்டு செல்லாமல் கால்நடைகளுக்கு உணவாக வீசும் சம்பவங்களும் நடந்து வருகிறது. இப்பிரச்னைக்கு தீர்வாக தக்காளியிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க தேவையான தொழிற்சாலை அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகிறோம்', என்றனர்.தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணை தலைவர் பாலதண்டபாணி கூறியதாவது: உடுமலை பகுதியில் அதிகளவு சிறு, குறு விவசாயிகளே தக்காளி சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர். சந்தைப்படுத்துதல் பிரச்னை காரணமாக தக்காளி சாகுபடி விவசாயிகள் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர். தக்காளியிலிருந்து உணவுப்பொருட்கள் உட்பட பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்க முடியும். இவ்வகை தொழிற்சாலையை உடுமலை பகுதியில் துவக்க வேண்டும். இதனால், உற்பத்தி அதிகளவு இருக்கும் போது தொழிற்சாலையின் தேவைக் காக தக்காளி கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாவது தவிர்க்கப்படும். இது குறித்து தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்', என்றார்.

## திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க முடிவு : ரூ. 2 கோடி அனுமதி

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,21:10 IST

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க மத்திய தோட்டக்கலை இயக்ககம் ரூ. 2 கோடியை அனுமதித்துள்ளது.
கம்பம் பகுதியில் 2 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க தமிழக அரசு, மத்திய தோட்டக்கலை வாரியம், மத்திய தோட்டக்கலை இயக்ககம் ஆகியவைகள் மானிய உதவி, உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள், திராட்சை கொடி, நவீன தொழில்நுட்பங்கள் தருவது போன்ற பணிகளை செய்து வருகின்றன. கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக ரூ.2 கோடியை மத்திய தோட்டக்கலை இயக்ககம் அனுமதித்துள்ளது.தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் செந்தில்குமார் கூறுகையில், " கம்பம் பகுதியில் திராட்சை சாகுபடி பரப்பை

அதிகரிக்க ஹெக்டேருக்கு ரூ. 50 ஆயிரம் வீதம் 2 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது. கூடுதல் விபரத்திற்கு தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்', என்றார்.

**பயிர்சேதம் தெரிவிக்கலாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,21:10 IST

தேனி : வன விலங்குகள் பயிர்களை சேதப்படுத்தாமல் தடுக்க சோலார் மின்வேலி அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன.இதையும் மீறி வனவிலங்குகளால் பயிர்சேதம் ஏற்பட்டால், விவசாயிகள், விவசாயத்துறை நேர்முக உதவியாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும். அதிகாரிகள் வனத்துறையிடம் பேசி, சேதங்களை மதிப்பீடு செய்து, இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுப்பார்கள் என, கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***கையிருப்பு மிகவும் அதிகரித்துள்ளதால் அரிசி, கோதுமை ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளை தளர்த்த பரிசீலனை***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*உற்பத்தி மற்றும் கையிருப்பு அதிகரித்துள்ளதால், உணவு தானியங்கள் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது. விரைவில் அரிசி, கோதுமை தலா பத்து லட்சம் டன் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட வாய்ப்புள்ளது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.*

*தானியங்கள் கையிருப்பு*

உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு, கடந்த 2007–ஆம் ஆண்டில் அரிசி, கோதுமை ஏற்றுமதியில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இன்று வரை கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவில்லை. இந்நிலையில் நடப்பு ஆண்டில் மத்திய அரசின் இலக்குகளை விஞ்சி உணவு தானியங்கள் கையிருப்பு 6.56 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. அரசு விதிமுறைகளின்படி இன்றைய நிலையில் 1.62 கோடி டன் தானியங்கள் கையிருப்பு இருந்தால் போதுமானது. தேவைக்கு அதிகமாக குவிந்து தானியக் கிடங்குகள் நிரம்பி வழிவதால் தாராள ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கலாம் என அரசு கருதுகிறது.

சர்வதேச அளவில் கோதுமை உற்பத்தி குறையும் என அண்மைக் கால மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. தேவைக்கு கீழ் உற்பத்தி குறையும் என்பதால் உலக நாடுகளிடம் உள்ள கோதுமை கையிருப்பு கணிசமாக குறைந்து விட வாய்ப்புள்ளது. இதனால் கோதுமைக்கான தேவைப்பாடு அதிகரிக்கும். எனவே கையிருப்பை அதிகம் கொண்டுள்ள இந்தியா, கோதுமையை சர்வதேச சந்தைக்கு அனுப்பினால் அன்னியச் செலாவணி வருவாய் குவியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நம் நாட்டில் தற்போது பாசுமதி அரிசி ஏற்றுமதியில் மட்டும் கட்டுப்பாடுகள் இல்லை. இந்நிலையில் சாதாரண அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து பிரணாப் முகர்ஜி தலைமையிலான அமைச்சர்கள் குழு ஒன்று விரைவில் கூடி விவாதிக்க உள்ளது. கோதுமையைக் காட்டிலும் சாதாரண அரிசி ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட அதிக வாய்ப்புகள் உள்ளன என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்கா – தாய்லாந்து

உலக அளவில் கோதுமை ஏற்றுமதியில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. கடந்த பருவத்தில் அந்நாடு 2.40 கோடி டன் கோதுமையை ஏற்றுமதி செய்துள்ளது. சர்வதேச அளவல் அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தில் உள்ள தாய்லாந்து கடந்த 2010–ஆம் ஆண்டில் 85 லட்சம் டன் அரிசியை ஏற்றுமதி செய்துள்ளது. அரிசி, கோதுமை உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் இந்தியா முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளது.

**தென்மேற்கு பருவமழையால் ஊட்டி அணைகளில் நீர்மட்டம் உயர்வு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை**

*ஊட்டி, ஜுன்.30–*

*தென்மேற்கு பருவமழை காரணமாக ஊட்டிக்கு குடிநீர் வழங்கும் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. ஆனால் ஊட்டி நகர் பகுதியில் மட்டும் மழை அளவு குறைந்து உள்ளது.*

*அணைகள்*

*ஊட்டிக்கு குடிநீர் வழங்கும் அணைகளாக பார்சன்ஸ் வேலி, மார்லிமந்து, டைகர் ல், தொட்டபெட்டா, கோடப்பமந்து, ஓல்டு ஊட்டி, கிளன்ராக் போன்ற அணைகள் உள்ளன. மேலும் ஊட்டி நகருக்கும், வெலிங்டன் ராணுவ முகாம் மற்றும் அணிக்கொரை கிராம பகுதிக்கும் குடிநீர் வழங்கும் முக்கிய அணையாக உள்ளது பார்சன்ஸ்வேலி அணை.*

*நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தென் மேற்கு பருவமழை பெய்து வருகிறது. ஊட்டி நகரில் குறைந்த அளவு மழை பெய் தாலும் கூடலூர், நடுவட்டம், பைக்காரா, அவலாஞ்சி, அப்பர்பவானி, பார்சன்ஸ் வேலி பகுதியில் நல்ல மழை பெய்து உள்ளது.*

*தண்ணீர் அதிகரிப்பு*

*இந்த மழையின் காரணமாக ஊட்டிக்கும், வெலிங்டன் ராணுவ முகாமுக்கு குடிநீர் வழங்கும் பார்சன்ஸ்வேலி அணையில் கடந்த ஆண்டை விட 7 அடி அளவுக்கு நீர் மட்டம் அதிகமாக உள்ளது.*

*கடந்த ஆண்டு ஜுன் மாதம் 29–ந் தேதி 20.50 அடி நீர்மட் டம் இருந்தது. இந்த ஆண்டு 27 அடியாக நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. இதே போல் தற்போது ஊட்டி மார்லிமந்து அணையில் 14.50 அடியாகவும், டைகர்ல் அணையில் 16.50 அடியாகவும், தொட்ட பெட்டா அப்பரில் 17 அடி யாகவும், தொட்ட பெட்டா லோயரில் 13 அடியாகவும் நீர்மட்டம் உயர்ந்து உள்ளது*

*ஊட்டி நகரில் உள்ள கோரி சோலா அணையில் நீர்மட்டம் 3 அடி, கோடப்பமந்து அப்பர் 2.50 அடி, கோடப்பமந்து லோயர் 3 அடி, ஓல்டு ஊட்டியில் 6 அடி, கிளன்ராக் அணையில் 7 அடி என நீர்மட்டம் உள்ளது.*

*தென்மேற்கு பருவமழை கூடலூர் அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு, நடு வட்டம் பகுதியில் பெய்து இருந்தாலும் ஊட்டி வடக்கு பகுதியில் குறைவாகவே உள் ளது. ஜுலை மாதம் அதிகமாக தென்மேற்கு பருவமழை பெய்தால் மேட்டுப்பாளை யம்*

பவானி ஆற்றில் வெள்ளம் வர வாய்ப்பு உள்ளது.ஊட்டி நகருக்கு குடிநீர் வழங்கும் அணைகளில் நீர்மட்டம் உயர்வால் ஊட்டி நகருக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை என்று நகராட்சி என்ஜினீயர் ராமமூர்த்தி கூறினார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,800–2,850

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 4,350–4,400

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 9,350–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,550–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,887–00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 9,500–00
டின் (15கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 10,700.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரிஉள்பட) 1,155.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்டஎண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,555.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,100.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)540–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூன்.29–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 5,200 | 56.00 |
| கடலைபருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| கடலைபருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

### மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூன்.29–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 5,905
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8577
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 10,314
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,561
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 11,389
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 11,810
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 18,840

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூன்.29–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36–00 | காலிப்பிளவர் | ரூ. | 30–36 |
| கத்தரிக்காய் | ரூ. | 18–24 | பொறியல் தட்டை | ரூ. | 16–18 |
| வெண்டைக்காய் | ரூ. | 18–20 | தேங்காய் | ரூ. | 10–14 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 10–13 | பட்டாணி | ரூ. | 100–00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 9–12 | பூண்டு | ரூ. | 95–00 |
| புடலை | ரூ. | 16–18 | கறிவேப்பிலை | ரூ. | 12–00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18–20 | அகத்தி | ரூ. | 16–00 |
| சுரைக்காய் | ரூ. | 12–14 | வாழைக்காய் | ரூ. | 20–00 |
| பாகற்காய் | ரூ. | 18–22 | குடைமிளகாய் | ரூ. | 32–34 |
| கொத்தவரை | ரூ. | 12–14 | சாதா பீன்ஸ் | ரூ. | 20–22 |
| பூசணிக்காய் | ரூ. | 10–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 50–00 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–00 | கறிபீன்ஸ் | ரூ. | 22–24 |
| பேராக்காய் | ரூ. | 18–20 | புஸ்பீன்ஸ் | ரூ. | 28–30 |
| பச்சை மிளகாய் | ரூ. | 24–32 | காளான் | ரூ. | 80–150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26–28 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 26–00 | மாங்காய் | ரூ. | 8–10 |
| பெரியவெங்காயம் | ரூ. | 14–00 | திராட்சை | ரூ. | 32–00 |
| இஞ்சி | ரூ. | 34–00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 24–26 | கொய்யா1கிலோ | ரூ. | 20–22 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 20–22 | மாதுளை1கிலோ | ரூ. | 50–90 |
| சேனைகிழங்கு | ரூ. | 28–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–15 |
| கருணைகிழங்கு | ரூ. | 30–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 32–00 | மாம்பழம் | ரூ. | 20–50 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | ஆப்பிள் | ரூ. | 115–135 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | சாத்துக்குடி | ரூ. | 36–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–24 | நெல்லிக்காய் | ரூ. | 36–00 |
| முள்ளங்கி | ரூ. | 16–18 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 18–20 | வெள்ளரி | ரூ. | 14–28 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 10–12 | புளி 1 கிலோ | ரூ. | 75–00 |
| நூல்கோல் | ரூ. | 26–00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 28–30 |
| கொத்தமல்லி | ரூ. | 34–36 | அவரை | ரூ. | 18–00 |
| ட்ரின்ஸ் | ரூ. | 24–00 | நிலக்கடலை | ரூ. | 34–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | மக்காச்சோளம் | ரூ. | 12–18 |
| காலிகோஸ் | ரூ. | 14–16 | | | |
| புதினா | ரூ. | 16–00 | தர்பூசணி | ரூ. | 14–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 24200 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,200 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,750 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10,500 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9850 |
| கொப்பரை நாடன் | ரூ. 6350 |
| கொப்பரை ராசு | ரூ. 6400 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6700 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 7750 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 20000 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 20600 |
| ரப்பர் பால் | ரூ. 18000 |
| காப்பி | ரூ. 11000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 6000 |
| நேந்திரகாய் | ரூ. 2000 |
| இஞ்சி | ரூ. 1000 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,584.00 | 16,608.00 | 16,600.00 |
| ஒரு கிராம் | 2,073.00 | 2,076.00 | 2,075.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 51,475.00 | 55,350.00 | 55,000.00 |
| ஒரு கிராம் | 55.10 | 55.35 | 55.00 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூன்.29–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,660 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1210 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,550 | 100.00 |
| வனஸ்பதி | | |
| டில்லி பட்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | – |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.191.00 | அதிகபட்சவிலை | ரூ.291.00 |
| சராசரி விலை | ரூ.179.45 | சராசரி விலை | ரூ.271.79 |
| குறைந்தபட்சவிலை | ரூ.136.00 | குறைந்தபட்சவிலை | ரூ.235.00 |

**பட்டு நூல் ரூ.1,770**

## பழங்களின் அரசி என்றழைக்கப்படும்

# மங்குஸ்தான் பழ சீசன் தொடங்கியது

குன்னூர், ஜூன்.30–

நீலகிரி மாவட்டத்தில் மங்குஸ்தான் பழ சீசன் தொடங்கி உள்ளது.

**மங்குஸ்தான் பழம்**

பழங்களின் அரசி என்று மங்குஸ்தான் பழம் அழைக்கப்படுகிறது. பசுமை மாறா மற்றும் ஈரப் பதம் மிகுந்த வெப்பமண்டல பகுதி யில் விளையக்கூடியது ஆகும். மங்குஸ்தான் பழத் தின் தாவர வியல் பெயர் கார்சினியா மேங்கோஸ் டினா ஆகும்.

உடலில் குளுக்கோஸ் சக்தி உடனடியாக கிடைக்க செய்யும் ஆற்றல் இந்த பழத்துக்கு உண்டு. இதன் தாயகம் இந்தோனேசியா என்ற நம்பப்படுகிறது. இந்த பழத்தின் சாகுபடி இந்தோ னேசியா, பிலிப்பைன்ஸ், பர்மா, இலங்கை மற்றும் மலேசியா நாடுகளில் அதிக அளவில் செய்யப் படுகிறது.

**நாற்றுக்கள்**

இந்தியாவின் மங்குஸ்தான் பழத்தின் சாகுபடி அறிமுகப் படுத்தப்பட்டாலும், தற்போது நீலகிரி மாவட்டம் மற்றும் குற்றாலம், கன்னியாகுமரி, கேரள மாநிலம், கோட்டயம் பகுதிகளில் சிறப்பான விளைச் சலை தருகிறது. கடல் மட்டத்தில் இருந்து 400 மீட்டரில் இருந்து 900 மீட்டர் வரை உயரம் உள்ள பகுதியில் நன்கு விளைகிறது. மங்குஸ்தான் மரங்களில் இருந்து கிடைக்கும் விதைகள் மூலம் நாற்றுகளில் இருந்து புதிய மரங்கள் வளர்க்கப்படு கின்றன. பழங்களின் பருமனை பொறுத்து மங்குதஸ்தான் பழங்கள் 2 வகையாக பிரிக்கப்படுகின்றன.

**சீசன்**

ஒரு மரத்தில் ஆண்டுக்கு 50 பழங்கள் கிடைக்கும். நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஏப்ரல்–ஜூன் மற்றும் ஆகஸ்ட்– அக் டோபர் மாதங்கள் சீசன் காலங்கள் ஆகும். ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எதிர் பார்த்த அளவு மங்குஸ்தான் பழங்கள் கிடைக்க வில்லை.

தற்போது மங்குஸ்தான் பழ சீசன் தொடங்கி உள்ளது. பர்லியார், கல்லார் அரசு பழப்பண்ணை களில் இந்த பழங்கள் விளைந்துள்ளன. இந்த பழத்தில் பல்வேறு சத்துக்கள் நிறைந்து உள்ளன.

உடனடி குளுக்கோஸ் சக்தி, கார்போஹைட் ரேட், புரதம், நார்சத்து, கால்சியம், இரும்பு சத்து, மக்னீசியம், பாஸ்பரஸ், வைட்டமின் ஏ, வைட் டமின் சி உள்பட பல்வேறு சத்துக்கள் உள்ளன.

இதனால் இந்த பழத்தை நீலகிரி மாவட்டத்துக்கு வரும் சுற்றுலா பயணிகள் அதிகம் விரும்பி வாங்கி செல்கிறார்கள். இதன் காரணமாக இதன் விற்பனை சூடுபிடித்துள்ளது.



விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ள மங்குஸ்தான் பழங்களை படத்தில் காணலாம்.



# வேளாண்மை செய்திகள்

## குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் தொழில் தேனீ வளர்ப்பு

**வேளாண்** சார்ந்த தொழில்களில் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் தொழில் தேனீ வளர்ப்பு ஆகும். இந்த தொழிலை முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ செய்யலாம். கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை இல்லாமையை குறைத்து, கிராம மகளிர் முன்னேற்றத்திற்கு தேனீ வளர்ப்பு உதவுகிறது.

### தேனீ வளர்ப்பு

கிராமங்களில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு தேனீ வளர்ப்பு ஒரு வரப்பிரசாதம். தேனீ வளர்ப்பு தொழிலை தமிழகத்தில் சுமார் 50 ஆயிரம் பேர் மேற்கொண்டு வருகிறார்கள். வருகிற 5 ஆண்டுகளில் தேனீ வளர்ப்போரின் எண்ணிக்கையை 1 லட்சமாக உயர்த்தி, தேனீ உற்பத்தியை 2,500 டன்னில் இருந்து 5 ஆயிரம் டன்னாக உயர்த்தப்பட உள்ளன.

தேன் தருவது மட்டும் அல்லாமல் பயிர்களில் அயல் மகரந்த சேர்க்கை நடைபெற பெரிதும் உதவுவதால் மேலை நாட்டினர் தேனீக்களை 'வேளாண் தேவதைகள்' என்று வர்ணிக்கிறார்கள். இயற்கையாக இந்தியாவில் 4 வகை தேனீக்கள் உள்ளன. இவற்றுடன் இத்தாலிய தேனீக்களும் இந்தியாவில் வளர்க்கப்படுகின்றன.

### தேனீ வகைகள்

இதில் மலைத்தேனீ மிகவும் பெரியது. கொட்டும் தன்மை கொண்டது. விஷத் தன்மை கொண்டது. இவை அதிக அளவில் தேன் சேகரித்தாலும், பெட்டிகளில் வளர்ப்பதற்கு ஏற்றது அல்ல. கொம்புத்தேனீ உருவத்தில் சிறியதாகவும், குறைவாக தேன் சேகரிக்கும் தன்மை கொண்டது என்பதால் இவை வளர்ப்பதற்கு ஏற்றது அல்ல.


கொசு தேனீ, கொசுக்களை போன்று மிகவும் சிறியதாக காணப்படும். சிறிதளவே தேன் சேகரிக்கும் தன்மை கொண்டது. சிறிய மண்பானைகளில் வளர்க்க ஏற்றது. இந்திய தேனீ அல்லது அடுக்கு வகைதேனீக்கள் கொம்பு தேனீயை விட பெரியதாகவும், மலைத்தேனீயை விட சிறியதாகவும் இருக்கும். நன்றாக தேன் கிடைக்கும். பெட்டிகளில் வளர்க்க ஏற்றது. தமிழகத்தில் வணிக ரீதியா வளர்க்கப்படுகிறது.

### வளர்ப்பு முறைகள்

இத்தாலிய தேனீக்கள் ஐரோப்பிய கண்டத்திலும், இத்தாலியிலும் அதிகம் காணப்படுகிறது. தேனுக்காக பெட்டிகளில் வளர்க்கப்படுகிறது. இவை தாய்சாக் என்னும் நச்சுயிரியை பரப்புவதால் வளர்ப்பதற்கு தவிர்க்கப்படுகின்றன. தேனீ வளர்ப்பை வணிக ரீதியாக மேற்கொள்ள தேனீ கூட்டங்களை கூடுதலாக உணவு கிடைக்கும் இடங்களில் வைத்து வளர்க்க வேண்டும்.

தேனீக்கள் கூட, கூட தேன் உற்பத்தி கூடும். இடப்பெயர்ச்சி தேனீ வளர்ப்பு முறைகள் கன்யாகுமரி மாவட்டத்தில் அதிகம் காணப்படுகிறது. கேரளாவில் உள்ள ரப்பர் தோட்டங்களில் புதுத்தளிர் உருவாகும் நேரங்களில் தேனீ கூட்டங்களை அங்கு வளர்த்தால் வணிக ரீதியாக ரப்பர் தேனை பெற முடியும். நன்கு முதிர்ச்சி அடைந்த மரங்களில் மாசி மாதம் முதல் பங்குனி மாதம் வரை மதூர சுரப்பு கூடுதலாக இருக்கும்.

### இடப்பெயர்ச்சி



தேனீக்களை இடப்பெயர்ச்சி செய்யும் போது, இரவு நேரங்களில் எடுத்து செல்ல வேண்டும். ஒரே இடத்தில் அதிகமான பெட்டிகளை வைக்கக்கூடாது. அதிக தேன் சேரிக்க வலுவான தேனீ கூட்டம் இருக்க வேண்டும். காகித முறையின் மூலம் தேனீ கூட்டங்களை எந்த காலக்கட்டத்திலும் எளிமையாக இணைக்கலாம்.

தேர்வு செய்த பகுதி தேனீ வளர்ப்புக்கு ஏற்றதா என்று அறிய மலர் அட்டவணை தயார் செய்து, தேனீக்கள் எந்த பயிர்களை தேடி செல்கிறது என்று அறிந்து கொள்ள வேண்டும். பின்னர் அந்த பயிர்கள் எந்த காலத்தில் பூக்கும், எவ்வளவு காலம் பூத்திருக்கும், எப்போது முடிவுக்கு வரும் என்று அட்டவணைப்படுத்தி வைத்துகொள்ள வேண்டும்.

### மதுரம்–மகரந்தம்

தேனீக்களுக்கு தேவையான உணவு பெரும்பாலும் மலர்களிடம் இருந்தே கிடைக்கின்றன. மலர்கள் மதுரத்தையும், தேனீக்களுக்கு உணவாக மகரந்தத்தையும் தருகின்றன. தேனீ வளர்ப்போர் தேனீக்களுக்கு எந்தெந்த பயிர்கள் உணவு தருகின்றன என்பதை முன்கூட்டியே தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். மகரந்தம் புழுக்களின் வளர்ச்சிக்கும், அவற்றின் உடல் எடை கூடுவதற்கும் பயன்படுகிறது. அகத்தி, அரப்பு, இலவம், இலுப்பை, புங்கம், வேம்பு, அர்ச்சுன மரம், தீக்குச்சி மரம், செம்மரம், சோயா மொச்சை, குதிரை மசால், காப்பி, தும்பை, கள்ளி பூண்டு, ரப்பர், புளி, பாட்டில் புருசு ஆகிய பயிர்கள் தேன் உற்பத்தியாகும் மதுரத்தை அதிக அளவில் தருகின்றன. கருவேல், வெள்வேல், குடைவேல், ஆண்பனை, பாக்கு, தென்னை, நெல்லி, தக்காளி, கத்தரி, பூசணி, பரங்கி, சுரை, சவ்சவ், கம்பு, சோளம், மக்காச்சோளம், வெள்ளரி, சீமை வெள்ளரி ஆகிய பயிர்கள் அதிக மகரந்தம் தருகிறது.

### மருந்து தெளிப்பு

தேனீ வளர்ப்பதற்காக வைக்கப்பட்டு உள்ள புழு அடையில் தேனீயின் வளர்ச்சி பருவங்கள் அனைத்தும் இருத்தல் வேண்டும். மொத்த அடிப்பரப்பில் குறைந்தது கால் பகுதியிலாவது புழுக்கள் வளரும் நிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் புழுக்களின் உணவு தேவைக்காக பணி தேனீக்கள் ஆர்வத்துடன் அதிக அளவு மகரந்தம் திரட்டி வரும்.

பயிர்கள் பூக்க தொடங்கியவுடன் தேனீ பெட்டிகளை தோட்டத்தில் கொண்டு சென்று வைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு பெட்டி வைத்தால் போதுமானது. பூக்கள் பூத்திருக்கும் சமயத்தில் பூச்சிக் கொல்லி மருந்துகளை தெளிப்பதை தவிர்க்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால் மட்டுமே தேனீக்களை பாதிக்காத அளவு மருந்து தெளிக்க வேண்டும்.

### பயிர் விளைச்சல்

ஒருங்கிணைந்த பண்ணையத்திலும், இயற்கை விவசாயத்திலும், தேனீ வளர்ப்பை மேற்கொள்வதன் மூலம் தேனுக்காக தேனீ வளர்ப்பு என்று இல்லாமல், அயல் மகரந்த சேர்க்கையை அதிகரித்து பயிர்களின் விளைச்சலை அதிகரிக்கலாம்.

–தகவல்: சந்திரசேகரன், சுப்பிரமணியன், இந்திராகாந்தி, மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாச்சலம்.

## புதிய சிறுபான்மை இன பயிர்:

## மருத்துவ குணம் கொண்ட 'முட்டைப்பழம்'

**பல்வேறு** மருத்துவ குணங்கள் நிறைந்த முட்டைப்பழம் மக்களிடையே அதிக பிரபலம் அடையாத சிறுபான்மை இன பயிராகும். இந்த பழத்தின் தோற்றமும், சதைப்பற்றின் தன்மையும் வேக வைத்த முட்டையின் கருவை ஒத்திருப்பதால் முட்டைப்பழம் என்று அழைக்கப்படுகிறது. இந்த பழத்தின் தாயகம் தென் அமெரிக்கா. பவுட்டீரியா கம்பீசியானா என்ற தாவரவியல் பெயரைக்கொண்ட முட்டைப்பழம் சப்போட்டேசியா என்ற குடும்பத்தை சேர்ந்தது.



### முட்டைப்பழம்

முட்டைப்பழ மரப்பட்டையில் இருந்து தயாரிக்கப்படும் துவர்ப்புள்ள திரவம் காய்ச்சலை குணப்படுத்தும் தன்மை கொண்டது. விதையில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் குடல்புண் போன்ற நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது. எப்போதும் பசுமையுடன் காணப்படும் முட்டைப்பழம் நேராக சுமார் 7 முதல் 8 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது.

இதன் தண்டின் சுற்றளவு 1 மீட்டர் வரை காணப்படும். மரத்தின் எல்லா பாகங்களிலும், வெள்ளை நிற பசையுடன் கூடிய திரவம் உண்டு. எதிரெதிரான இலையமைப்பு கொண்ட இதன் நீண்ட இலைகள் கிளை நுனியில் கொத்தாக காணப்படும். இலை அடிப்பாக கணுக்களில் இருந்து கொத்தாகவோ, தனியாகவோ பூக்கள் தோன்றும்.

### நீள் வட்ட விதைகள்

இந்த பூக்கள் நறுமணமும் இருபால் தன்மையும் கொண்டவை. இவை வெண்மை கலந்த இள மஞ்சள் நிறத்துடன், 8 முதல் 11 மில்லி மீட்டர் நீளத்துடனும், பூவிழ்கள் 5 முதல் 6 பிரிவுகளாகவும் காணப்படும். பழங்கள் உருண்டை மற்றும் நீள்வட்ட வடிவத்துடன் காணப்படும். இளம் காய்கள் பச்சை வண்ணமுடனும், நன்கு முதிர்ந்த காய்கள் பளபளப்பாக ஆரஞ்சு கலந்த மஞ்சள் வண்ணமுடனும் காணப்படும்.

பழத்தின் சதைப்பகுதி மிருதுவாகவும், ஆரஞ்சு நிறத்துடனும், நல்ல இனிப்பாகவும் காணப்படும். நடுப்பகுதியில் 1 முதல் 4 பழுப்பு நிற நீள் வட்ட விதைகள் காணப்படும். இவை வெப்ப மண்டல மற்றும் மித வெப்பமண்டல பகுதிகளில் நன்கு செழித்து வளரும். பல்வேறு மண்வகைகளில் வளரும் பண்பு கொண்ட போதிலும் கரிமச்சத்து நிறைந்த வடிகால் வதியுள்ள மண்களில் மட்டுமே நன்றாக வளரும்.

### அறுவடை–மகசூல்

இந்த பயிர் விதைகள் மூலம் பெருக்கம் செய்யப்படுகின்றன. விதைகள் விரைவில் உயிர் தன்மையை இழந்து விடுவதால் பழங்களில் இருந்து விதைகள் பிரித்து எடுத்தவுடன் சிறிதளவு உலர்த்தியவுடன் மேட்டுப்பாத்திகளில் விதைத்து விட வேண்டும். விதைகள் முளைக்க ஆரம்பித்த 15 முதல் 20 நாட்கள் கழித்து பாலித்தீன் பைகளில் நடவு செய்ய வேண்டும். 6 மாதங்கள் கழித்து வயலில் நடவு செய்யலாம்.

நடவுக்கு பின் பரிந்துரைக்கப்பட்ட உரங்களை பயன்படுத்த வேண்டும். 5 ஆண்டுகளில் காய்க்க ஆரம்பித்து விடும். காய்கள் நன்றாக முதிர்ச்சி அடைந்து பழுக்கும் தருவாயில் அறுவடை செய்ய வேண்டும். மரம் ஒன்றில் இருந்து 400 முதல் 600 பழங்கள் மகசூலாக கிடைக்கும். இந்த பழத்தை தோலுடன் சாப்பிடலாம்.

### என்னென்ன சத்துக்கள்?

மேலும், பழங்களை மின் உலர்த்திகளால் உலர்த்தி, பவுடராக்கி, ஐஸ்கிரீம், ரொட்டி, கேக், ஜாம், மர்மலேடு, பழபார்கள் தயாரிப்பில் பயன்படுத்தலாம். இவை மிகுந்த சுவையும், சத்தும் கொண்டதாக இருக்கும். இந்த பழத்தில் கலோரிகள், நீர், புரதம், கொழுப்பு, மாவு, நார், சாம்பல், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு சத்துக்களும், கரோட்டின், தயமின், ரிபோபிளவின், நியாசின், அஸ்கார்பிக் ஆகிய வைட்டமின்களும், டரிப்போபான், மீத்தையானின், லைசின் என்ற அமினோ அமிலங்களும் காணப்படுகின்றன.

–தகவல்: தங்கசெல்வபாய், செல்வ குமார், இறைவன், வேளாண்மை அறிவியல் நிலையம், பேச்சிப்பாறை.

தினகரன்

## ரப்பர் விலை சரிகிறது

பதிவு செய்த நாள் 6/30/2011 12:49:52 AM



நாகர்கோவில் : கேரளா, குமரி மாவட்டத்தில் சில மாதங்களுக்கு முன்பு ரப்பர் விலை ஏறுமுகமாக இருந்தது. அதிகபட்சமாக ஒரு கிலோ ரூ.240 வரை உயர்ந்தது. இந்நிலையில் ரப்பர் விலை சரிய துவங்கியுள்ளது. கடந்த 27ம் தேதி கிலோவுக்கு ரூ.9.50 வரை ரப்பர் விலை குறைந்து ஒரு கிலோ ரப்பர் ரூ.199.50 ஆக விற்பனையானது. நேற்று முன்தினம் மீண்டும் கிலோவுக்கு ரூ.1 குறைந்தது. கோட்டயம் மார்க்கெட்டில் ஆர்எஸ்எஸ் கிரேடு 4ம் ரக ரப்பர் விலை கிலோ ரூ.207 ஆகவும், தரம் பிரிக்கப்படாத ரப்பர் விலை கிலோ ரூ.198.50 ஆகவும் விற்பனையானது.